நாள்: 13.03.2025
OS.191/2016
பெயர் ராஜமாணிக்கம்
வா.சா.3

குறுக்கு விசாரணை

சின்னமனூரில் உள்ள பிரதான சிவன் கோயில் பெயர் பூலாநந்தீஸ்வரர் சிவகாமியம்மன் ஆலயம் ஆகும். பூலாநந்தீஸ்வரர், சிவகாமியம்மன், முருகன், நடராஜபெருமாள், பைரவர் ஆகியோர்கள் உற்சக தெய்வங்கள் ஆகும். மண்டகப்படிக்கு பூலாநந்தீஸ்வரர், சிவகாமியம்மன், முருகன் ஆகிய பரிவார தெய்வங்கள் மட்டுமே ஊருக்குள் உலா வருவார்கள். 13 மண்டகப்படிக்கு தான் சிவன் கோவிலிலிருந்து உற்சவ மூர்த்திகள் வருவார்கள். மற்ற சமுதாயத்தினர் நடத்தும் மண்டகப்படியில் நான் கலந்துகொள்வது வழக்கம். அந்தந்த சமுதாயத்தில் உள்ள நபர்கள் அந்த 13 மண்டகபப்படியை நடத்துவார்கள் என்றால் தவறு. அந்த சமுதாயத்திற்கு உரிமைப்பட்ட நபர்கள் தான் நடத்துவார்கள். அதே முறைப்படி தான் 4-ம் நாள் மண்டகப்படியும் சமூகத்தில் உள்ள முக்கிய நபர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அதனால் 4-ம் நாள் மண்டகப்படியை சின்னமனூர் பிள்ளைமார் சமுதாயத்திலிருந்து நடத்துகிறோம் என சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. எங்கள் சமுதாயத்தில் நாங்கள் முடிவு செய்து முதல் மரியாதை கொடுத்து வந்தோமா என்றால் இல்லை. நீதிமன்ற தீர்ப்புப்படி முதல் மரியாதை கொடுக்கப்பட்டு வருகிறது. நீதிமன்ற தீர்ப்புக்கு முன்னால் இன்னாருக்குத்தான் முதல் மரியாதை கொடுக்க வேண்டும் என எழுத்துப்பூர்வமான ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. பரம்பரையாக வருகிறது. எழுத்துப்பூர்வமான ஆவணம் உள்ளது. அது எங்கள் வழக்கறிஞரிடம் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. கோவிலிலிருந்து மரியாதை செய்வதற்கு மாலை பிரசாதங்கள் பரிவட்டம் ஆகியவற்றை கோவில் நிர்வாகத்தினர் வாங்கி வரமாட்டார்கள். அந்தந்த சமுதாயத்தினர் தான் வாங்கி வருவார்கள். சின்னமனூர் பிள்ளைமார் கச்சகட்டி வகையறாவுக்கும் மலையகவுண்டர் வகையறா, கவுண்டர் வகையறாவுக்கும் வேளாளர் பெருமக்கள் சங்கத்திற்கும் தான் முதலில் பிரச்சனை நடந்தது. எங்களுக்குள் நடைபெற்ற பிரச்சனையில் இந்து சமய அறநிலையத்துறை வழக்கு தரப்பினரா என்றால் அவரும் கட்சி சேர்க்கப்பட்டிருந்தார்கள். இந்துசமய அறநிலையத்துறைக்கும் சுழற்சி தீர்ப்பாணைக்கும் சம்மந்தம் கிடையாது என்றால் சரியல்ல. எங்களுக்குள் ஏற்பட்ட

பிரச்சனைக்கு பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணைக்கு இந்துசமய அறநிலையத்துறை கட்டுப்பட்டதல்ல என்றால் சரியல்ல. சின்னமனூர் வேளாளர் பெருமக்கள் சங்கத்திற்கும் மண்டகப்படிக்கும் என்ன தொடர்பு என்றால் சங்கத்தலைவருக்கு கோவில் சார்பாக கட்டுவார்கள். தனிப்பட்ட நபர்கள் யார் கட்டுவார் என்றால் கோவிலில் பூஜை செய்யும் பட்டர் கட்டுவார். சின்னமனூர் வேளாளர் பெருமக்கள் சங்கம் உரிமம் புதுப்பிக்கப்பட்டுள்ளதா என்றால் புதுப்பிக்கப்படவில்லை. அதற்கான நடவடிக்கைகளை எங்கள் சங்கத்திலிருந்து எடுத்து வருகிறோம். கடந்த 7, 8 ஆண்டுகளாக எங்கள் சங்கள் புதுப்பிக்கப்படவில்லை. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் எங்கள் சங்கத்தை புதுப்பிக்க பதிவுத்துறை சென்று அணுகுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். 2023 ல் உயர்நீதிமன்றம் அந்த உத்தரவை பிறப்பித்துள்ளது. சின்னமனூர் வேளாளர் பெருமக்கள் சங்கத்தில் உள்ள நபர்கள் எங்கள் சங்கத்திலிருந்து வெளியேறி புதிய சங்கத்தை உருவாக்கியுள்ளார்கள் என்றால் சின்னமனூர் பிள்ளைமார் சமூதாயத்தில் 5 சங்கம் உளள்து. பிள்ளைமார் சங்கத்தினர் எந்த சங்கத்தில் வேண்டுமானாலும் சேரலாம். புதிய சங்கத்தில் 4ம் பிரதிவாதி மோகன் என்ன பொறுப்பில் இருக்கிறார் என்றால் இல்லை. அவர் அரசு ஊழியர் என்பதால் அவர் துாண்டிவிட்டு சின்னமனூர் வேளாளர் உறவின்முறை சங்கம் என்று ஆரம்பித்துள்ளார். அந்த சங்கத்தில் அவர் உறுப்பினராக உள்ளார். பொறுப்பில் இல்லை. எங்கள் சங்கத்தில் உறுப்பினராக இருந்தாரா என்றால் இன்றுவரை இருந்து வருகிறார். சின்னமனூர் வேளாளர் பெருமக்கள் சங்கத்திற்குரிய உபயவிதிகள் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. உபயவிதியில் முதல் மரியாதை கொடுக்க வேண்டும் என்பது எந்த சரத்தில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சங்க உபயவிதியில் முதல் மரியாதை கொடுக்க வேண்டும் என எந்த விதியும் இல்லை என்றும், அதனால் தான் உபயவிதியை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சின்னமனூர் வேளாளர் பெருமக்கள் சங்கம் சார்பாக வேறு வழக்கு எதுவும் எந்த நீதிமன்றத்திலும் இல்லை. மண்டகப்படி சம்மந்தமாக இணை ஆணையர் முன்பு ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது. 1ம் வாதி மகேந்திரனை சின்னமனூர் வேளாளர் பெருமக்கள் சங்கத்தினர் தலைவராக ஏற்றுக்கொண்டது சம்மந்தமாக எழுத்துப்பூர்வமான உத்தரவு எதுவும் உள்ளதா என்றால் scheme decree தான் உள்ளது. அவர் பரம்பரை தலைவர் என்பதால் தனிப்பட்ட தீர்மானம் எதுவும்

கிடையாது. பரம்பரை என நான் கூறியதால் சமூகத்தில் ஏற்றுக்கொண்டதாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. 4ம் நாள் மண்டகப்படி நடக்கும்போது 1ம் பிரதிவாதி அருள்செல்வன் மண்டகப்படி நடக்கும் இடத்தில் இல்லை என்றால் சரிதான். அவர் இல்லாததை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு முருகனும், மோகனும் தன்னிச்சையாக செயல்பட்டார்கள் என்று சொல்லியுள்ளேன். அருள்செல்வன் மீது எந்த குற்றச்சாட்டும் கிடையாது என்றால் சரியல்ல. 4ம் நாள் மண்டகப்படிக்கு அருள்செல்வம் இடையூறு ஏற்படுத்தினார் என்று நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 4ம் நாள் மண்டகப்படி எங்கள் 3 பிரிவுகளுக்கிடையே உள்ள ஒற்றுமையின்மை காரணமாகத்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி முருகன் மகேந்திரனை பார்த்து கெட்ட வார்த்தைகளால் குடும்பத்தைப்பற்றியும் அவரைப்பற்றியும் பேசினார். பிரச்சனை வந்தவுடன் நாங்கள் காவல்நிலையம் வந்து விட்டோம். அந்த 3, 4 பிரதிவாதிகள் உற்சவ மூர்த்திகளை கோவிலுக்குள் கொண்டு சென்று விட்டார்கள்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)